முருகப்பெருமான் துணை

**மகான் குருராஜர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.01.2024,** திங்கட்கிழமை

1. வரம் தரும் வேலவன் அம்சமே
வள்ளலே தவதரும சூட்சுமமே
அறம் வளர்க்கும் ஞான சேகனே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது கலை திங்கள்
குறைவிலா அட்டமதிகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 08 ம் நாள், 22.01.2024, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் குருராஜர் யானும்
துல்லிய ஆசிதனை உலகநலம் பெற
3. நலம் தரும் ஞான மார்க்கம்
ஞானபண்டிதனே அருளி வர
வேலவா என பிரணவக் குடிலை
வேண்டி மக்கள் வருதலுற
4. வருகவே அரங்கமகான் எனும்
வல்லமையான குரு அனுகூலமாகி
முருகப் பெருமான் காட்சியும்
முழுமை ஞானமும் கிட்ட நேரும்
5. நேருமைபட தொடர்ந்தணுகியே
நிலமதனில் தீட்சை பலமுற
தரும பாதையை பின் தொடர
தானென்ற ஆணவ மலம் விலகி
6. விலகியே போறிபுலன் அடங்க
வினையெனும் தீவினையாவும்
விலகியே சர்வ பாதுகாப்பாய்
விடைதேடும் அமைதிமிக்க

7. மிக்க ஞான நன்னடத்தை
மெய்ப் பொருள் உணரும்படி
ஆக்கமும் ஊக்கமும் கூடி
அழியாமை எனும் வரத்தை

8. வரத்தை அரங்க ஞானியரின்
வழியே தவ சக்தியாகவும்
அறத்தின் தரும பலமாகவும்
அடைந்து உலகோர் சிறப்பர்

9. சிறப்பான ஞானயுகம் படைக்க
சித்திபெற்ற ஞானி அரங்கன்
அறப்பாதையே கலியினை மாற்றி
ஆற்றல் மிக்க ஞானயுகம் படைக்கும்

10. படைக்கவே அரங்கன் தயவில்
பாமரரும் கடைத் தேற்றம்
தடையின்றி ஞான வழியோடு
தருமவழியில் கண்டுத் தேறுவர்

11. தேறவே உலக மாற்றமதும்
தேசிகனால் வெற்றிகாணும்
அறமே கலியிடரை வெல்லும்
அறிவித்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—